**ஓம் ஈஸ்வராய நமஹ!**

**ஆறுமுகனார் தீட்சையின் போது** (28-12-2019), **அவர் உரைத்த உபதேசம்**

அன்னையரே அன்னையரே

ஆறுயிர் அன்னையரே

பிறவி பல கண்டு நின்றார்

பிறவா வரம் வேண்டி நின்றார்

பித்தனாய் அலைகின்றார்

பிறை சூடி நிலைக்கின்றார்

ஆன்ம ஒளி பரவி நின்றால்

அகமானது குளிர்ந்திடுமாம்

அகமும் புறமும் இணைந்திருந்தால்

ஜீவனும் பரமனும் இணைந்திடுவர்

மேலோர் கீழோர் மேதினியில் உண்டோ

மேன்மை கொண்ட ஆன்மா மிளிர்ந்திடும் தருணத்தில்

அகப்புறத் தூய்மை அமைதியை நல்கிடும்

ஈசனை அடிபணிய ஈரேழுலகும் வசப்படும்.

Gnanalayam

அன்னையே, மாய உலகம் என்பது ஈசனையும் மறைபொருளாய் இருத்திடவே முனைகின்றது. கலியுலகத்தின் எல்லையில் ஆதவனை அனுதினமும் தரிசித்திட இயலாத பிரதேசங்களிலும் மானுடர்கள் வசித்திடவே முனைகின்றனர். ஈசனே மறை பொருளாய் விளங்கினால் ஆன்மாவானது எவ்விதம் வெளிப்படும். உயரிய ஆன்மாவினைத் திகம்பர தரிசனம் கண்டவர் மாய உலகினில் நின்று முழுமையாக விடுபடுவர். உடல் எனபது புவியினில் வசித்திட ஆன்மாவானது ஈசனோடு வசித்திடும். அத்தகைய நிலையினை எய்திடவே மானுட ஆன்மாக்கள் முனைந்திடல் வேண்டும். ஆன்மாவினையும் ஈசனையும் கலப்புறச் செய்திட்டே காட்சி பாவம் கண்டோர் யாவரும் விண்ணிலும் நிலைத்திடலாம் மண்ணிலும் நிலைத்திடலாம்.

உயரிய பல நிலைகளை உணர்த்திடும் ஆன்மாவோடு அனுதினமும் உறவாடுங்கள். ஆன்ம பாவனை என்பது மிக உயரியது. ஆன்மாவோடு ஒன்றெனக் கலந்திட்டால் பேதங்கள் நீங்கிவிடும். உயர்வு, தாழ்வு எனும் பேதமை அழிந்திட ஆன்மாக்கள் மிளிர்ந்திடும். ஒளி வீசும் ஆன்மாவே பிற ஆன்மாக்களை ஈர்த்திடும் ஈச அருளினையும் பெற்றிடும். உபதேசம் வேண்டியே நின்றிடும் அன்னையே யாம் உரைத்தவை யாவுமே மிக உயரிய உபதேசம் என்றே ஏற்றிடுங்கள். மானுட குலம் உய்வுற ஆன்மாக்கள் ஒளிர்ந்திடும்.

அருளோடு பொருளும்

அகமோடு புறமும்

இரவோடு பகலும்

ஈசனோடு சக்தியும்

Gnanalayam

இனிதே கலப்புற்றால்

இறையருள் பெருகிடும்

அறிவோடு ஞானமும்

ஆக்கத்தோடு ஊக்கமும்

பண்போடு பணிவும்

பதமோடு பக்குவமும்

இனிதே கலப்புற்றால்

இறையருள் பெருகிடும்

பக்தியோடு பரவசமும்

பரமனோடு பரவெளியும்

இச்சையோடு கிரியையும்

இன்பமிகு ஈதலும்

இனிதே கலப்புற்றால்

இறையருள் பெருகிடும்

கருணையோடு காருண்யமும்

கண்களோடு பார்வையும்

வெண்மையோடு ஒளியும்

வேலோடு சூலமும்

இனிதே கலப்புற்றால்

இறையருள் பெருகிடும்

மண்ணோடு விண்ணும்
மதியோடு நுட்பமும்
தேனோடு பாலும்
தெவிட்டாத பேரானந்தமும்
இனிதே கலப்புற்றால்
இறையருள் பெருகிடும்

விழிகளோடு ஆன்ம ஒளியும்
உயிரினோடு உடலும்
உத்தமனோடு சித்தனும்
கற்றவனோடு ஞானியும்
இனிதே கலப்புற்றால்
இறையருள் பெருகிடும்

அன்போடு அறமும்
ஒழுக்கத்தோடு ஓம்பலும்
வினைகளோடு விசாரமும்
சிலைகளோடு சீளமும்
இனிதே கலப்புற்றால்
இறையருள் பெருகிடும்

நிலமோடு நீரும்

நீரோடு காற்றும்

காற்றோடு கனிவும்

கனிவோடு வீரமும்

இனிதே கலப்புற்றால்

இறையருள் பெருகிடும்

நற்சிந்தனைகளோடு நயமும்

பரிவோடு பாசமும்

பதியோடு பத்தினியும்

பற்றற்று நிலைத்திட்டு

இனிதே கலப்புற்றால்

இறையருள் பெருகிடும்

ஒளியொடு ஒலியும்

ஓசையோடு இசையும்

இசையோடு பண்ணும்

பண்ணயோடு பாடல்களும்

இனிதே கலப்புற்றால்

இறையருள் பெருகிடும்

Gnanalayam

எண்ணங்களோடு சொற்களும்
சொற்களோடு செயல்களும்
செம்மையோடு செழுமையும்
முழுமையான ஆற்றலும்
இனிதே கலப்புற்றால்
இறையருள் பெருகிடும்

கடலோடு ஆறும்
கற்போடு நெறியும்
நாவோடு சுவையும்
நற்றமிழோடு புலமையும்
இனிதே கலப்புற்றால்
இறையருள் பெருகிடும்

ஈசனோடு சக்தியும்
ஈன்றிட்ட கோள்களும்
பிணிகளற்ற உடலும்
திரைகளற்ற உயிரும்
இனிதே கலப்புற்றால்
இறையருள் பெருகிடும்

மாயைகளும் தீவினைகளும்

அறியாமையும் ஆணவமும்

பொய்மையும் ஏய்மையும்

புலனடங்கா பெருநிலையும்

புறத்தே அழித்திட்டால்

இறையருள் பெருகிடும்.

இறையருள் பெருகிடவே பல வழிமுறைகள் உண்டு என்பதனை விளக்கமுறக் கற்றறிந்தால் வாழ்வு எளிமையுறும். இறையருள் ஒன்றே இயக்கத்திற்கும் உறுதுணையாகும். இறையருள் ஒன்றே இயங்காப் பெருநிலையினை எய்திடவும் வழிவகுக்கும். அறிவு என்பது பெருகிட எல்லையினை எய்திடும். அறிவின் எல்லையில் துவங்கிடும் ஞானம் என்பதோ எல்லைகள் அற்றது, ஈசனையும் கடந்தது. பிறவாப் பெருநிலை என்பது எவ்விதம் பிறவிகளைக் கடந்து நிலைக்கின்றதோ அவ்விதமே ஞானம் என்பது ஈசனைக் கடந்தும் நிலைத்திடும்.

பல்வேறு உயர் ஆன்மாக்கள் யாவரும் தேவ நிலைகளையும், தெய்வ நிலைகளையும் எய்தியதன் மூலக் காரணம் ஈசனைக் கலப்புற்று, ஈசனைக் கடந்தும் பயணித்திட்ட காரணத்தினால் என்பதனை உணருங்கள் ஈசனையும் கடந்து அண்டப் பேரண்டங்களுக்கு ஆன்மா பயணித்திடல் வேண்டும். உணர்வு நிலைதனிலே அவை யாவும் உணர்த்திடல் வேண்டும். இந்நிலை சித்திக்க ஆன்மாவானது விடுதலையுற வேண்டும். ஆன்மா விடுதலையுற வேண்டுமெனில்

திரைகள் விலகிடல் வேண்டும். திரைகள் விலகிட தீட்சைகளை ஏற்றிடல் வேண்டும்.

தீட்சைதனை நல்கிட குருவினை நாடிடல் வேண்டும். குருவினை நாடி ஏற்றிட நல்வினைப் பதிவுகள் வேண்டும். நல்வினைப் பதிவுகளைப் பெற்றிட அன்பும், பண்பும், பணிவும் வேண்டும். அன்பு பெருகிட நல் எண்ணங்கள் வேண்டும். நல் எண்ணங்கள் பெருகிட இறையருள்தனை வேண்டியே பெற்றிடல் வேண்டும்.

இறையருள் பெருகிட உயர் தெய்வங்களைத் தொழுதிடல் வேண்டும். உயர் தெய்வங்களோ ஈசநிலையினையும் கடந்து அண்டத்தில் சஞ்சரிக்கும் ஆற்றல்களைப் பெற்றிருக்க வேண்டும்.

இச்சுழற்சியினை மானுடர்கள் தெளிவுற உணர்தல் வேண்டும். மானுட ஆன்மாக்கள் அனைத்தும் அண்டத்தில் உதித்திட்ட பாதரசத்துகள்கள். அவை யாவும் ஈசனாரும் சூரியனை அடைந்து, கோள்களின் துணைக்கொண்டு புவியினிலே உதித்து பல்லறிவு கொண்ட மானுடனாய் உயர்ந்து ஆன்மாவினைக் கண்டு தெளிந்து, விடுவித்து அருளிட மீண்டும் ஈசனோடு கலப்புற்று உதித்திட்ட பகுதியான அண்டத்திலேயே சஞ்சரித்திடலாம்.

துவங்கிய பகுதியினை அடைவதே ஓர் முழுமையான சுழற்சி என்பதனை உணர்ந்து, வழித்தடத்தில் தோன்றும் தடைகளைக் களைந்து தொடர் செயலாயப் பயணித்து வட்டத்தைப் பூர்த்தி செய்திடல் வேண்டும். தடைகளைக் களைந்து பயணித்திடவே தீட்சைகள் உதவிடும். விழித்திரைகளே உயரிய தடைகள் என்றும், ஆன்மாவானது அண்டத்தினை அடைந்திட வேண்டுமெனில் சுழற்சியானது பூர்த்தியுற

வேண்டுமெனில் தீட்சைகளே பெரும் உதவி புரிந்திடும் என்றும் பரிபுரணமாக உணர்ந்திடல் வேண்டும்.

குருவானவரின் அருளினைப் பெற்றால் அண்டத்துக்கு எளிதாய்ப் பயணித்திடலாம் என்றும் ஒளியிழைப்பாலமானது ஈசனையும் அடைந்து, கலந்து, களித்திட உதவிடும் என்றும் உணர்ந்து கொண்டால் தீட்சைகளின் சாராம்சம் மற்றும் பலன்தனை ஏற்றிடலாம். ஈசன் என்பவர் அருவமானவர் என்றும், உருவம் கொண்டு காட்சி அளித்திட இயலாத நிலையில், ஈசத்துளிகளான, விடுதலை கண்டு உயர் நிலைகள் சித்திக்கப் பெற்ற தெய்வங்களை முன்னிருத்தியே ஆசிகளை நல்கிடுவார் என்றும், தெய்வ நிலைகள் யாவும் கலியுக எல்லையில் நஞ்சுகள் நிறைந்த சூழலில் உருவம் கொண்டே தோன்றிட முயன்றிடார் என்றும், அருவாமாய்ச் செயல்புரிந்தே ஞானத்தினை அறிவாய்த் திரித்து ஆசிகளை நல்குகின்றனர் என்றும் அவ்வாசிகளே குருவருளாய் மலர்கின்றது என்றும், குருவின் திருவருளே விழிகளை ஊடுருவி தீட்சைகளாய் மலர்ந்து, கழிவுகளை நீக்கி, ஆன்மாவினை விடுவித்தருள்கின்றது என்றும் தெளிவுற உணர்ந்துக் கொணடால் தெய்வ நிலை சித்திக்கும்.

தீட்சைகளைப் பெற்று, அன்னையின் திருவருளை ஏற்று மானுடப் பிறவியின் எல்லையினை எய்தி பிறவாப் பெருநிலை எனும் உயர்வினைப் பெற்று விண்மீனாய் நிலைத்திடவே அருளாசி நல்குகின்றோம்.